*செய்தி வெளியீடு எண் :18* *நாள் :12.11.2019*

**தேனி மாவட்டம்**

**அரசு புறம்போக்கு நிலங்களில் உள்ள கல்குவாரிகளை டெண்டர் மற்றும் ஏலம் குத்தகைக்கு எடுத்திட தனிநபர்கள் விண்ணப்பிக்கலாம்**

**மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி ம.பல்லவி பல்தேவ், இ.ஆ.ப., அவர்கள் தகவல்:-**

******

*தேனி மாவட்டத்தில் அரசு புறம்போக்கு நிலங்களில் அமைந்துள்ள சாதாரண வகை கல்குவாரிகளை தனிநபர்களுக்கு டெண்டர் மற்றும் ஏலம் மூலம் குத்தகைக்கு வழங்க விண்ணப்பங்களை வரவேற்று தேனி மாவட்ட சிறப்பு அரசிதழ் வெளியிடப்பட்டுள்ளது.*

*அதன்படி, ஆண்டிபட்டி வட்டத்திற்குட்பட்ட கோவில்பட்டி கிராமத்தில் 4 கல்குவாரிகளும், சண்முகசுந்தரபுரம் கிராமத்தில் 4 கல்குவாரிகளும் மற்றும் போடிநாயக்கனூர் வட்டத்திற்குட்பட்ட கோடாங்கிபட்டி கிராமத்தில் 1 கல்குவாரியும், போடிநாயக்கனூர் கிராமத்தில் 1 கல்குவாரியும், சிலமலை கிராமத்தில் 5 கல்குவாரிகளும் என மொத்தம் 15 கல்குவாரிகள் தனிநபர்களுக்கு டெண்டர் மற்றும் ஏலம் மூலம் குத்தகை உரிமம் வழங்க மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களுக்கு விண்ணப்பிக்கலாம்.*

*டெண்டர் உறைகள் சமர்ப்பிக்கப்பட வேண்டிய கடைசி நாள் 19.11.2019 மாலை 5.00 மணிக்குள் விண்ணப்பித்திட வேண்டும். ஏலம் மறுநாள் 20.11.2019 அன்று காலை 10.30 மணியளவில் நடைபெறும். மேலும், விபரங்கள் தெரிந்து கொள்ள மாவட்ட ஆட்சியர் வளாகம், இரண்டாம் தளம், அறை எண்.51, உதவி இயக்குநர், புவியியல் மற்றும் சுரங்கத்துறை அலுவலகத்தை தொடர்பு கொண்டு கொள்ளலாம் என மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி ம.பல்லவி பல்தேவ், இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்துள்ளார்.*

**வெளியீடு : செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், தேனி.**